**THE LABOUR COURT, SALEM**
**C.P.No. 1 Of 2017**

**19.11.2024**

**RW2 – திரு.C. சுரேஷ்**
குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

நான் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் செயலாட்சியராக கடந்த 1 வருடமாக பணிபுரிகிறேன். மனுதாரர் பணியிலிருந்து ஓய்வு பெறும் வரை நான் எதிர்மனுதாரர் சொசைட்டியில் பணிபுரியவில்லை என்றால் சரிதான். மனுதாரர் 31.07.2011 அன்று பணிஓய்வு பெற்றார் என்றால் சரிதான். மனுதாரர் பணிஓய்வு பெறும் தேதி வரை அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எதுவும் நிலுவையில் இல்லை என்றால் சரிதான். மனுதாரர் உறுப்பினர்களுக்கு வழங்கிய கடன் தொகை ரூ.7,94,200/– தவணை தவறி நிலுவையில் இருந்தது. தவணை தொகை நிலுவையில் இருந்தது சம்பந்தமாக மனுதாரருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணையோ, ஒழுங்கு நடவடிக்கையோ எடுக்கப்பட்டதா என்றால் ஏதாவது தவறு செய்தால்தான் குற்றச்சாட்டு குறிப்பாணை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்ப்டும். தவணை தொகை வசூல் ஆகாததால் மனுதாரரின் ஓய்வூதிய பயன் அவர் வழங்கிய கடன் வசூல் ஆகும் வரை நிறுத்திவைக்கப்பட்டு தொகை வசூல் ஆகும் போது அதற்கேற்ப தொகை திரும்ப வழங்கப்பட்டுவிட்டது.

சங்கத்திற்கு வரவேண்டிய தொகை முழுவதும் வட்டியோடு வசூல் ஆகிவிட்டது என்றால் சரிதான். மனுதாரர் ஓய்வு பெற்ற பிறகு புதிய ஊதிய ஒப்பந்தம் 01.04.2008 முதல் அமுல்படுத்தப்பட்டது என்றால் சரிதான். புதிய ஊதிய ஒப்பந்தப்படிதான் மனுதாரருக்கு பணிக்கொடை தொகை கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். புதிய ஊதிய ஒப்பந்தப்படி மனுதாரருடைய சம்பளம் ரூ.23,207/– ஆக நிர்ணயம் செய்யப்பட்டது என்றும், இதன் அடிப்படையில்தான் மனுதாரருக்கு பணிக்கொடை கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது என்றால் ஓய்வு பெற்ற மாதத்தில் மனுதாரர் ரூ.21,410/– மாத சம்பளமாக பெற்றுள்ளார். நான் சொன்ன விபரங்கள் தவறு என்றும்,

மனுதாரருக்கு சம்பளமாக ரூ.23,207/– ஆக கணக்கிடப்பட்டு Ex.P11 ஆவணப்படி மனுதாரருக்கு பணிக்கொடை கணக்கிடப்பட்டு வழங்கப்பட்டது என்றால் சரிதான். மனுதாரர் சங்கத்தில் செயலாளராக பணிபுரிந்தபோது சங்கத்தில் புதிதாக ஒருவரை பணிக்கு நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. அதேபோல் அவருக்கு யாரையும் பணிநீக்கம் செய்யும் அதிகாரம் இல்லை என்றால் சரிதான். மனுதாரர் தொழிலாளி என்ற முறையில்தான் பணிபுரிந்து வந்தார் என்றும், வழக்கிற்காக மனுதாரர் தொழிலாளி இல்லை என்றும் சொல்லியுள்ளேன் என்றால் ச்ரியல்ல. எதிர்மனுதாரர் சங்கத்திலிருந்து மனுதாரருக்கு ஓய்வு கால பலன் தொகை வழங்கவேண்டும் என்றால் தீர்மாணம் போடப்பட்டு இருக்கும் என்றால் சரிதான். தீர்மாணம் போடப்பட்டுள்ளது. அந்த தீர்மாணம் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட தொகைக்கு ரசீது பெறப்பட்டிருக்கும் என்றால சரிதான். அந்த ரசீது இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் காசோலையாக தொகை கொடுக்கப்பட்டால் காசோலை பெறப்பட்டது என ஒப்புதல் மட்டும் பெறப்படும்.

மனுதாரருக்கு எந்தெந்த தேதியில் எந்தெந்த இனங்களில் தொகை பட்டுவாடா செய்யப்பட்டது என சொல்லப்பட்டுள்ளதா என்றால் கணக்கீட்டு பட்டியல் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. Ex.R8 ஆவணம் எதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது என்றால் சங்க ஆவணங்கள் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. அந்த சங்க ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மனுதாரர் மனுவில் Statement ல் சொல்லியுள்ள கணக்கீட்டு படி தொகை காலதாமதமாக வழங்கப்பட்டுள்ளது என்றால் முதல் மூன்று தேதிகளில் குறிப்பிட்டுள்ள தொகைக்கான நாட்கள் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. மீதி குறிப்பிடப்பட்டுள்ள நான்கு தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான நாட்கள் தவறுதலாக ஒரு வருடம் கூடுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. வருங்கால வைப்புநிதிக்கான தொகை வட்டியுடன்

மனுதாராருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. அந்த தொகைக்கு மீண்டும் வட்டி கோரியுள்ளார். மனுதாரருக்கு கொடுக்கப்பட்ட தொகை காலதாமதமாக கொடுக்கப்பட்டது என்றும், வழக்கிற்காக Statement ல் நாட்கள் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடந்த 1 வருடமாக மட்டும் பணியிலிருப்பதால் மனுதாரரின் ஓய்வூதிய பலன்கள் மற்றும் அது சம்பந்தப்பட்ட விபரங்கள் தெரியாமல் நிர்வாகத்திற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியபடி காலதாமதமாக கொடுக்கப்பட்ட தொகைக்கு வட்டி கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல. வட்டி வழங்கப்பட்டுவிட்டது. மனு அனுமதிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem.